
**மின்தமிழன் நா.கண்ணனின் நூல்கள்**

[place your orders @ https://pages.razorpay.com/KannanNoolgal]

# *உலகு படைத்தல்*

# உலகு படைத்தல்




தகவல் புரட்சி என்பது தமிழ் கூறும் நல்லுலகை எவ்வகையில் பாதித்துள்ளது? என்பது அடிநாதம். இப்புரட்சி தமிழுக்கு ஆறாம்திணை எனுமோர் புதிய திணையையே தந்துள்ளது என்பது மிக முக்கிய கண்டுபிடிப்பு. அதற்கான வரைவிலக்கணத்தை இந்நூல் அளிக்கிறது. தமிழின் வளங்கள் மின்மயமாக வேண்டும் எனும் கருத்து வலியுறுத்தப்படும் போது வேற்றுகிரகங்களில் மானுட சஞ்சாரம் பற்றிய 19ம் நூற்றாண்டு நூல் பற்றிப் பேசுகிறது ஒரு கட்டுரை.

1. தகவல், தமிழ், வாழ்வு
2. நம் வேர்களைத்தேடி
3. நாளைய உலகில் தமிழ்
4. தமிழுக்கு தகவல் புரட்சி தரும் புதிய திணை
5. மின்வெளியில் நிரந்தரமாகும் தமிழ் மொழி
6. உலகு படைத்தல்
7. அறிவுத்திறம் வேண்டும்
8. கூட்டு ஆய்விற்கான காலம் கனிந்து விட்டது
9. இலகு முறையில் இலக்கப்பதிவு
10. வலைப்பூவெனும் தோழி!

11. வையம் சுமப்பதும் வம்பு
12. பூகோள பகோள விஷயங்கள்
13. கிடப்பில் கிடக்கும் தமிழின் முதுமை சொல்லும் சான்றுகள்
14. ஆரியக்கூத்து
15. காதலா? கடமையா? என்ற அபிநவ கதை!
16. சுழலும் உலகம் (புத்தக முன்னுரை)
17. நா. கண்ணன் - ஓர் அறிமுகம்

## மின்வெளி விளைச்சல்

**முனைவர் ம.இராசேந்திரன்**

மேனாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை

பேராசிரியர் டாக்டர் கண்ணன், வேற்றுக் கிரகவாசி; வெளிநாட்டில் வாழ்கிறார்;

அவர் உலகமே தனி; அவர் மின்னுலகவாசி; தமிழ் மின்னுலக மூத்த குடிமகன்.

திடீரென்று அறிவிக்கப்பட்ட 500, 1000 ரூபாய்த் தாள்களைப் போல அவரது கட்டுரைகள் பழைய நம்பிக்கைகள் சிலவற்றைச் செல்லாதவை ஆக்குகின்றன.

புதிய நம்பிக்கைகள் பலவற்றை உருவாக்குகின்றன.

சமஸ்கிருதம் ஐரோப்பியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்று சொல்லப்பட்டதற்கு மொழி ஆய்வு தவிர்த்து ஐரோப்பியர்களின் ஆளும் தந்திரமும் காரணம் என்று கூறுகிறார்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது

இணையக் குடிமக்களுக்கே மிகவும் பொருந்தும் என்கிறார்.

தமிழின் தொன்மை, தற்கால நிலை, வரும் காலம் என்று

பெருமைகொள்ளவும் கவலையடையவுமான காரணங்களைச் சொல்கிறார்.

அறிவியலைத் தமிழில் சொல்வதோடு தமிழர்களின், இந்தியர்களின் அறிவியல் மேதைமையைச் சுட்டிக் காட்டுகிறார்.

கல்லுக்குள் தேரை போல செல்லுக்குள் டி.என்.ஏ. இருப்பதாகச் சொல்கிறார்.

அறிவியலில், அங்கங்கே திவ்யபிரபந்தம் கலந்து. பக்தி மணம் கமழச் செய்கிறார்.

அவரது மின்னுலகப் பெருமை, படிக்கிறவர்களையும் தொற்றிக் கொள்கிறது.

தொல்காப்பியர் ஐந்திணை சொன்னார்; ஆறாம் திணை இணையம் என்கிறார்.

தொல்காப்பியருக்கு நிலமும் பொழுதும் முதற்பொருள்.

ஒவ்வொரு திணைக்கும் நிலமும் பொழுதும் வேறுவேறு.

ஆனால் ஆறாம் திணைக்கென்று தனி நிலமும் இல்லை; பொழுதும் இல்லை.

தமிழில் திணை மயக்கம் இருக்கிறது;

ஆனால் மின்னுலகில் கால மயக்கமும் முயக்கமும் கலந்து ஆறாம்திணை இருக்கிறது.

மின்னுலகில் இன்றைக்கு அனுப்பும் மடல் நேற்றைக்கே ஒருவருக்குக் கிடைக்கிறது. இந்தியாவிலிருந்து இன்று மாலை அனுப்பும் மடல் இன்றைய தேதியில் காலையில் இன்னொரு நாட்டிற்குக் கிடைக்கிறது.

மாய தந்திர உலகமாக இருக்கிறது. சாதி இல்லை; மதம் இல்லை; ஏழை இல்லை; பணக்காரர் இல்லை; அதிகாரம் இல்லை; அச்சம் இல்லை; அதிகாரத்தைப் பயமுறுத்தும் அதிகாரம் மிக்கது மின்னுலகம் என்கிறார்.

பழைய இலக்கியங்களுக்கும் பண்பாட்டுச் சின்னங்களுக்கும் பாதுகாப்பானது. ஒவ்வொருவரும் தனக்கான உலகில் தனியே வாழவும்

ஒவ்வொருவரும் தனக்கான உலகத்தைத் தானே உருவாக்கிக் கொள்ளவும்

ஒத்த கருத்துடையவர்களோடு உரையாடி மகிழவும்

வேறுபட்டவர்களோடு விவாதம் செய்யவும்

விரும்பாதபோது தலைமறைவாகவும் வாய்ப்பளிக்கிற உலகம்பற்றிப் பேராசிரியர் டாக்டர் கண்ணன் பழகு தமிழில் சொல்லி இருக்கிறார்.

இப்படியெல்லாம் பாதுகாப்பானது சுதந்திரமானது என்று நாம் நம்புகிற உலகம் நம்மை எப்படியெல்லாம் வேவு பார்க்கிறது?

நம்மைக் கண்காணிக்க நம்மிடமிருந்தே நாமே அறியாத நமது கடவுச் சொற்களைக் கைப்பற்றி நம்மையே

உளவாளியாக்கிக் கொண்டிருக்கிறது என்பது தனிக்கதை.

எனினும் தகவல் தொழில் நுட்பத்திற்குத் தகவமைத்துக் கொள்பவர்களுக்கே

இனி எதிர்காலம் இருக்கும். தவிர்க்கவோ தள்ளி நிற்கவோ நினைப்பவர்களுக்கு

நிகழ் காலத்திலும் இடம் மறுக்கப்படும்.

மின்னுலகில் தமிழுக்கு நிலையான இடம் கிடைத்திருக்கிறது; உலகத் தமிழர்களின் ஒத்துழைப்பில் நாளும் தமிழ் வளர்ந்து வருகிறது.

தமிழ், மின்னுலகில் வாழவும் வளரவும் பேராசிரியர் டாக்டர் கண்ணன் ஆறாம்திணையில் நடத்தியுள்ள ஆழ அகல உழவு தெரிகிறது.

அந்நிய மண்ணிலிருந்தும் தமிழ் வளர்க்கும் அவரது சிந்தனை வியர்வை தெரிகிறது.

கணினி வந்தபின் உலகம் உள்ளங்கைக்குள் சுருங்கவில்லை;

வீடு உலகமாக விரிவடைந்திருக்கிறது.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்

எல்லைகளற்ற மின்வெளி உலகமாக விரிந்திருக்கிறது;

ஆறாம்திணையையும் பெற்றிருக்கிறது.

இவ்வாறெல்லாம் பேராசிரியர் டாக்டர் கண்ணன் அவர்களின் கட்டுரைத் தொகுப்பு, காலமும் வெளியும் திரிபடையும் மின்வெளி வயல்களில் அவரது கண்டுமுதலாகிய விளைச்சலைக் காட்டுகிறது..

வாழ்த்துகள்.

அன்புடன்

முனைவர் ம.இராசேந்திரன்
மேனாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்